## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – புதிய அறிவிப்பு (2011–12 ஆம் ஆண்டு) – ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் மாணவ / மாணவியருக்கு பரிசுத் தொகை வழங்குதல் – 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் மாவட்ட அளவில் முதன்மை பெற்றவர்களுக்கான பரிசுத் தொகை (District Topper Award) உயர்த்தி ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந3) துறை

அரசாணை ( நிலை) எண் : 119 நாள் : 22.11.2011

கார்த்திகை 6, திருவள்ளுவர் ஆண்டு 2042

படிக்கப்பட்டது.

1) அரசாணை எண்.1245,ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 13.07.1989.
2) அர்சாணை எண்.38, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,, நாள் 11.05.1998.
3) ஆணையர், ஆதிதிராவிடர் நலம் கடித எண்.உ3/12605/2011, நாள் 25.08.2011.

------

ஆணை :

மேலே பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், மாவட்ட அளவில் 12–ம் வகுப்பில் முதலிடம் பெறும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் மாணவ / மாணவியருக்கு ரூ.3000/–மும் மற்றும் 10–ம் வகுப்பில் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடம் பெறும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் மாணவ / மாணவியருக்கு தலா ரூ.1000/–, ரூ.500/– மற்றும் ரூ.300/– வீதம் வழங்கி ஆணையிடப்பட்டது.

2) இதனை தொடர்ந்து ஆதிதிராவிடர் நல ஆணையர் தமது 25.08.2011 நாளிட்ட கடிதத்தில் 12–ம் வகுப்பில் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடம் பெறும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் மாணவ / மாணவியருக்கு தலா ரூ.6000/–, ரூ.4000/– மற்றும் ரூ.2000/– என உயர்த்தி வழங்குமாறும், 10–ம் வகுப்பில் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடம் பெறும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர் மாணவ / மாணவியருக்கு தலா ரூ.3000/–, ரூ.2000/– மற்றும் ரூ.1000/– எனவும் உயர்த்தி வழங்கி ஆணை வெளியிடுமாறு அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

3) 2011–2012–ஆம் ஆண்டு புதிய அறிவிப்புகளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணைப்படி 12–ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாவட்ட அளவில் முதலாவதாக இடம் பெறும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிருத்தவ மதம் மாறிய ஆதிதிராவிட மாணவ / மாணவியருக்கு வழங்கப்படும் பரிசுத் தொகையினை ரூ.3000/–லிருந்து ரூ.6000/– ஆகவும், 10–ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் மாவட்ட அளவில் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்கள் பெறும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிருத்தவ மதம் மாறிய ஆதிதிராவிட மாணவ / மாணவியருக்கு வழங்கப்படும் பரிசுத் தொகையான ரூ1000/–, ரூ.500/– மற்றும் ரூ.300/– என்பதனை ரூ.2000/–, ரூ.1000/– மற்றும் ரூ.500/– என உயர்த்தி வழங்கப்படும் என மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) அவர்கள் அறிவித்துள்ளார்.

4) ஆதிதிராவிடர் நல ஆணையரின் கருத்துருவை கவனமுடன் ஆய்வு செய்து அதனை ஏற்று 2011–2012–ஆம் கல்வி ஆண்டு முதல் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் ஒவ்வொரு மாவட்டத்திலும் முதலாவது இடத்தை பெறும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிருத்தவ மதம் மாறிய ஆதிதிராவிட

(

மாணவ / மாணவியருக்கு வழங்கப்படும் பரிசுத்தொகையான ரூ.3000/– என்பதனை ரூ.6000/– எனவும், 10–ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் ஒவ்வொரு மாவட்டத்திலும் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்கள் பெறும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிருத்தவ மதம் மாறிய ஆதிதிராவிட மாணவ / மாணவியருக்கு வழங்கப்படும் பரிசுத் தொகையான ரூ.1000/–, ரூ.500/– மற்றும் ரூ.300/– என்பதனை ரூ.2000/–, ரூ.1000/– மற்றும் ரூ.500/– என உயர்த்தி வழங்க அரசு ஆணையிடுகிறது.

5) பரிசுத் தொகையினை உயர்த்தி வழங்குவதால் ஏற்படும் கூடுதல் செலவினமான ரூ.3,00,800/–ம் (ரூபாய் மூன்று இலட்சத்து எண்ணூறு மட்டும்) 2012–13 ஆம் ஆண்டு முதல் வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படும் தொகையிலிருந்து மேற்கொள்ளப்படும். மேலும் மாவட்ட அளவில் ஒன்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் ஒரே மதிப்பெண் பெறும் பட்சத்தில் உரிய விவரங்களுடன் கூடுதல் நிதி ஒதுக்கத்திற்கான கருத்துருவினை அரசுக்கு ஒவ்வொரு ஆண்டும் அனுப்புமாறு ஆதிதிராவிட நல ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6) மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 01 ஆதிதிராவிடர் நலன் 277 – கல்வி – I திட்டத்தில் சேராதது – AG ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளுக்குப் பரிசுகள் வழங்குதல் 59 – பரிசுகளும் வெகுமதிகளும்.
(துதொகு 2225 01 277 AG 5904)"

7) இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு. ஏண்.88/AD&TW/2011, நாள் 19.11.2011 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ.சு. ஜீவரத்தினம்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்:-

ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை–5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–5.
இயக்குநர், பள்ளிக்கல்வித்துறை, கல்லூரி சாலை, சென்னை–6.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் / அனைத்து மாவட்ட ஆதி(ம)பந அலுவலர்கள்.
மாநிலக் கணக்காய்வு தலைவர், சென்னை–6/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–8/35/6.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.

நகல்:–

நிதித் (ஆதி(ம)பந / வசெ பொது–II) துறை, சென்னை–9.
பள்ளிக் கல்வித்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு ஆதிதிராவிட நல அமைச்சரின்
நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின்
செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின்
அனைத்துப் பிரிவுகள், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

பிரிவு அலுவலர்